

தலைமைச் செயலகத்தில், நேற்று (09.06.2023) தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, தலைமையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் தென்மேற்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், அரசுத் துறை செயலாளர்கள், துறைத் தலைவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் இராணுவம், விமானப்படை, கப்பற்படை, கடலோர காவல்படை, இந்திய வானிலை ஆய்வு மையம், ஒன்றிய நீர்வள ஆணையம், தேசிய பேரிடர் மீட்புப் படை உள்ளிட்ட ஒன்றிய அரசுத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கொரியர் பி.முருகன் தலைமை! வ.பெ.சுரேஷ் – மு.கோபி முன்னிலை!

# இராயபுரம் - 52 ‘அ’ வட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு சிறப்பு பட்டிமன்றம்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு - கோவி.செழியன் - தா.இளைய அருணா சிறப்புரை!

சென்னை, ஜுன் 10-

சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் மேற்கு பகுதி 52 ‘அ’ வட்டக் கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மாபெரும் சிறப்பு பட்டிமன்றம் இன்று (10.6.2023- சனிக்கிழமை) மாலை 6 மணியளவில் அஜிஸ் முகம்மது கௌஸ் தெருவில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு வட்டச் செயலாளர் கொரியர் பி.முருகன் தலைமை வகிக்கிறார்.

பகுதிச் செயலாளர் வ.பெ.சுரேஷ், மாவட்ட துணைச் செயலாளர் மு.கோபி, இரா.செந்தில்குமார், நா.சண்முகம், எம்.கே. இஸ்மாயில், கு.ரமேஷ், எஸ்.திருஞானம், வி.மலையம்மாள், இ.மதன், கீதா சுரேஷ், எஸ். புகழேந்தி, நா.கஜேந்திரன், எஸ். ரமேஷ், ஜி.எஸ்.முருகன், எம்.பாபுபாய், சலாவுதீஷ், டி.ஆர்.எஸ்ஞானகுரு, ஜெ.கே.நாதன், இரா. பாலன், எம்.ரவி, ஜெ.கௌரீஸ்வரன், எல்.பாலா லட்சுமணன், கோ.வேலுமணி, ஒய்.எம்.டி.இஸ்மாயில், ஆர்.எஸ்.லட்சுமிபதி, எம். கே.கமாலுதீன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழக க.பாபு, எம்.அன்வர், சி.சுலோச்சனாம்மாள், கே.லோகேஷ், ஜெ.அக்பர் பாஷா, டி.சந்திரன், பி.அன்சர், டி.ராஜேந்திரன், என். பாபு, கற்பகம், சுசீலா, ஏ.கே.சர்தார், ஆர்.ஏ.ரஷித், எம்.கார்த்திகேயன், டி.கல்யாணி, இ.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.உதயா, பி.விஜயகுமார், ஏ.காஜாஉசேன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

திரையெங்கும் பரவும் திராவிட மாடல் ஆட்சி நடத்தும் மக்களின் முதல்வர் தலைவர் தளபதி அவர்களின் நிலைத்த புகழுக்கு பெரிதும் காரணம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிப் பணியா? இயக்கப் பணியா? எனும் தலைப்பில் நடைபெறும் பட்டிமன்றத்திற்கு முனைவர் கோவி.செழியன் நடுவராக பொறுப்பேற்கிறார்.

ஆட்சிப்பணியா? என கரூர் முரளி, தூத்துக்குடி சரத் பாலா ஆகியோரும், இயக்கப்பணியா? என நெல்லிக்குப்பம். புகழேந்தி, சைதை சாதிக் ஆகியோரும் உரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்வில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மாவட்டக் கழக செயலாளர் தா. இளையஅருணா, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ., ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., ஜெ.ஜெ.எபிநேசர் எம்.எல்.ஏ., இரா.மதிவாணன், என்.நவீன், நா.மனோகரன், பி.டி.பாண்டிச்செல்வம், ஆர்.எம்.டி.ரவீந்திரன், இரா.கருணாநிதி, இரா. வெற்றிவீரன், வி.தயாளன், க.நா கம்மை, கி.ராஜேந்திரன், எல்.அருளரசன், வே. சிவகுமார், என்.மருதுகணேஷ், க.கோவிந்தசாமி, பி.சோமசுந்தரமூர்த்தி, ரெயின்போ என்.விஜயகுமார், விஜியலட்சுமி விஜயகுமார் எம்.சி., நிரஞ்சனா எம்.சி., பா.வேளாங்கன்னி எம்.சி., விலோ டி.சுரேஷ், எம்.தீனதயாளன், ஏ. ரமேஷ்பாபு, கே.மதன், த.ஜெயபாலன், பி.சேகர், கு.சுந்தர், பி.ஜெயலட்சுமி, லோ.மோகன் மற்றும் பலர் பங்கேற்கின்றனர்.

வட்ட துணை செயலாளர் எம்.முருகன் நன்றி கூறுகிறார்.




எழும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் கழக சட்டத்துறை இணைச் செயலாளருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், சென்னைப் பல்கலைக்கழக எஃப்.50 அரங்கில் நடைபெற்ற சென்னைப் பல்கலைக்கழகக் கடைநிலை ஊழியர் நலச் சங்கப் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற நிர்வாகிகள் பதவி ஏற்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, சான்றிதழ்களை வழங்கி, உரையாற்றினார். இந்நிகழ்விற்கு சென்னைப் பல்கலைக்கழகப் பதிவாளர் பேராசிரியர் எஸ்.ஏழுமலை தலைமை வகிக்க, சென்னைப் பல்கலைக்கழகம், சேப்பாக்கம் வளாக இயக்குநர் பேராசிரியர் எஸ்.ஆம்ஸ்ட்ராங் முன்னிலை வகித்தார். சென்னைப் பல்கலைக்கழக கடைநிலை ஊழியர் நலச் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜே.வரதராஜன், சென்னைப் பல்கலைக்கழக அலுவலர் பேரவையின் தலைவர் எம்.சுரேஷ், சென்னைப் பல்கலைக்கழக டாக்டர் அம்பேத்கர் எஸ்.சி./எஸ்.டி.ஊழியர் நலச் சங்கத்தின் தலைவர் டி.காளிதாஸ், தமிழ்நாடு அனைத்துப் பல்கலைக்கழக அலுவலக சங்கங்களின் கூட்டமைப்பைச் சேர்ந்த ம.விஜயகுமார் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கு. இராதாமணி
### ஜுன் 10 (2019)



**கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, திருமணம் செய்யாமலேயே கழகப் பணியாற்றியவர்.**

**கலிஞ்சிக்குப்பம் கிளைக் கழகச் செயலாளராக, பின்னர் ஆறு முறை கண்டமங்கலம் ஒன்றியக் கழகச் செயலாளராக – விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளராகவும் – விழுப்புரம் மத்திய மாவட்ட அவைத் தலைவராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**விழுப்புரம் மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் – மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக்கூடத் தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின் மூலம்

# பொதுமக்களுக்கு குடிநீர் - கழிவுநீர் இணைப்புகள்!

### சென்னை குடிநீர் வாரியம் அறிவிப்பு!

சென்னை, ஜுன் 10-

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களான அழைத்தால் இணைப்பு (மையப் பகுதிகளுக்கும்- Core Areas) மற்றும் இல்லந்தோறும் இணைப்பு (விரிவாக்கப்பட்ட பகுதிகளுக்கும் Added Areas) கழிவுநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு வந்தது. இந்நிலையில், குடிநீர் இணைப்பு மற்றும் கழிவுநீர் இணைப்புகளை எளிதில் பொதுமக்கள் பெறக்கூடிய வகையில் மேற்கூறிய திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டு புதிய திருத்தப்பட்ட குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு திட்டத்திற்கு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் அரசாணை (Ms) எண்.72, 6.6.2023 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம், பொதுமக்கள் தங்கள் வீட்டிற்கு குடிநீர் / கழிவுநீர் இணைப்பைப் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட பகுதி/பணிமனை அலுவலகங்களில் நேரிடையாகவும், தொலைபேசி எண்.(044-45674567) மற்றும் இணையதளம் (https://cmwssb.tn.gov.in) மூலமாகவும் விண்ணப்பிக்கலாம். உரிய ஆய்வுகளை மேற்கொண்ட பின்னர் ஆவணங்கள் உரிமையாளரிடம் சரிபார்க்கப்பட்டு குடிநீர்/கழிவுநீர் இணைப்பு வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று சட்டம், 1978ன்படி விண்ணப்பதாரரின் ஒப்புதல் பெற்று நுகர்வோருக்கு குடிநீர்/கழிவுநீர் இணைப்புகள் வழங்கப்படும்.

குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புகளுக்கான விண்ணப்பங்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட பின்னர் உரிய பரிசீலனை மேற்கொள்ளப்படும். அதன் பின்னர், இணைப்பிற்குரிய முழுத் தொகையையோ அல்லது முதல் தவணைத் தொகையையோ செலுத்தியவுடன் இணைப்புகள் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள (BPL) பிரிவினருக்கு இணைப்புக் கட்டணமாக ரூ.100/ (நூறு மட்டும்) வசூலிக்கப்படும். இவர்களுக்கு வழங்கப்படும் குடிநீர்/கழிவுநீர் இணைப்புகளுக்கான கட்டணங்கள் (சாலை வெட்டு மறுசீரமைப்புக்கான கட்டணங்கள் உள்பட) சென்னை குடிநீர் வாரியத்தால் ஏற்றுக் கொள்ளப்படும்.

தரை தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய (G+1) மாடி கட்டிடங்கள் (குடியிருப்புகள் மற்றும் பகுதி வணிக கட்டிடங்கள்) 1800 சதுர அடி வரை இணைப்புக் கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் (உள்கட்டமைப்பு மேம்பாட்டு கட்டணங்கள் உள்பட) அனைத்து கட்டணங்களும் ஒரே தவணையாகவோ அல்லது 10 தவணைகளில் (ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஐந்து ஆண்டுகளில்) செலுத்தலாம்.

தரை தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் கூடிய (G+2) மாடி கட்டிடங்கள் (குடியிருப்புகள் மற்றும் பகுதி வணிக கட்டிடங்கள்) மற்றும் வாகன நிறுத்துமிடத்துடன் கூடிய 3 மாடி கட்டிடங்கள் (Stilt +3) 2700 சதுர அடி வரை குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு பெறுவதற்கு இணைப்புக் கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் (உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் கட்டணங்கள் உள்பட) அனைத்து கட்டணங்களையும் ஒரே தவணையாகவோ அல்லது மூன்று தவணைகளில் (ஆறு மாதங்களுக்கு ஒருமுறை, 18 மாதங்களில்) செலுத்தலாம்.

பிற வகையான கட்டிட உரிமையாளர்கள், குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு பெறவிருக்கும் கட்டிடத்தின் கட்டுமானப் பணி நிறைவு பெற்றதற்கான சான்றிதழை சமர்ப்பித்து கழிவுநீர் மற்றும் குடிநீர் இணைப்பிற்கான முழு கட்டணத் தொகையினை ஒரே தவணையாக செலுத்தி இணைப்பை பெற்றுக் கொள்ளலாம்.

குடிநீர் வழங்கல்/கழிவு நீரகற்றல் இணைப்புகள் வழங்குவதற்கான அமைப்பு தயாரானதும், சம்பந்தப்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் இணைப்புகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 24 மணி நேரத்திற்குள் சாலைகள் சீரமைக்கப்படும். மேலும், சாலை மறுசீரமைப்பு கட்டணங்களையும் பொதுமக்கள் தவணை முறையில் செலுத்தலாம். குடிநீர்/கழிவுநீர் இணைப்புகளுக்கான கட்டமைப்புகள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள இடங்களில், வீட்டின் சுற்றுச்சுவர் வரையிலான சாலை வெட்டு சீரமைப்பு கட்டணங்களை செலுத்த வேண்டியதில்லை.

குடிநீர்/கழிவுநீர் இணைப்புக் கட்டணங்கள், கட்டிடம் கட்டப்பட்ட மொத்த பரப்பளவின் அடிப்படையில் வசூலிக்கப்படும். குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புக் கட்டணம்/வைப்புத் தொகை ஆகியவை ஏற்கனவே உள்ளாட்சி அமைப்புகளுக்கு செலுத்தப்பட்டிருந்தால், இணைப்பு வழங்கும்போது அந்த தொகை ஈடு செய்யப்படும்.

விண்ணப்பதாரர்கள் குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புக் கட்டணங்களை இணைய வழியிலான கட்டண நுழைவாயிலைப் (online Gate Way) பயன்படுத்தியோ, ரொக்கமாகவோ அல்லது வங்கி வரைவோலை (Demand Draft) மூலமாகவோ அனைத்து பகுதி அலுவலகங்கள்/பணிமனை அலுவலகங்களில் அலுவலக வேலை நாட்களில் செலுத்தலாம். பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்கள் பழைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புப் பெறுவதற்கான கட்டணங்களை ஏற்கனவே செலுத்தியிருந்தால், புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளில் பழைய PVC குடிநீர் குழாயை மாற்றி புதிய DI குழாய்கள் பதித்து குடிநீர் இணைப்புகள் எவ்வித கட்டணமுமின்றி வழங்கப்படும்.

எனவே, பொதுமக்கள் புதிய திருத்தப்பட்ட குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு திட்டத்தின் மூலம் எளிய முறையில் குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பினைப் பெற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்.044-4567 4567

இணையதள முகவரி : https://cmwssb.tn.gov.in

### பள்ளிகள் திறப்பு :

# அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் 1500 சிறப்புப் பேருந்துகள்!

### போக்குவரத்துக் கழகம் அறிவிப்பு!

சென்னை, ஜுன் 10

09.06.2023 அன்று வார இறுதி நாட்கள் மற்றும் 12.06.2023 அன்று பள்ளிகள் திறப்பதை முன்னிட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் வாயிலாக சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகிறது.

இது குறித்து அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் தகவல் வருமாறு:-

2023-ஆம் வருடம் பள்ளிகளுக்கான கோடைக் கால விடுமுறை முடிந்து வரும் 12.06.2023 அன்று பள்ளிகள் திறக்க இருப்பது மற்றும் இந்த வார இறுதி நாட்களான 09.06.2023 முதல் 11.06.2023 வரையிலான (வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு) மூன்று தினங்களில் கூடுதலான பயணிகள் தமிழ்நாடு முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில், தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி, தமிழ்நாட்டின் முக்கிய இடங்களிலிருந்து வார இறுதி நாட்களில் சென்னைக்கு 650 பேருந்துகளும் மற்றும் பல்வேறு இடங்களிலிருந்து அதாவது கோவை, மதுரை, திருநெல்வேலி, திருச்சி, சேலம் போன்ற இடங்களிலிருந்து முக்கிய இடங்களுக்கும் மற்றும் பெங்களூருக்கும் கூடுதலாக 850 சிறப்பு பேருந்துகள் என, ஆக மொத்தம் 1,500 பேருந்துகளை இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, தொலைதூர பயணம் மேற்கொள்ள இருக்கும் பயணிகள் தங்களது பயணத்தை முன்கூட்டியே திட்டமிட்டு, முன்பதிவு செய்து பயணித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



இச்சிறப்பு பேருந்துகள் இயக்கத்தினை அனைத்து பேருந்து நிலையங்களிலும், போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, கண்காணித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், மதுரை மற்றும் திருச்சியிலிருந்து முன்பதிவு செய்யாத பயணிகளின் தேவைக்கேற்ப கூடுதல் பேருந்துகள் இயக்கிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, பயணிகள் மேற்குறிப்பிட்டுள்ள பேருந்து சேவையினை பயன்படுத்தி தங்களது பயணத்தினை திட்டமிட்டுக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

### சென்னையில் பேரிடர் மீட்புத்துறை ஆலோசனை!

சென்னை, ஜுன் 10 -

பருவமழையின்போது ஏற்படும் பாதிப்புகளை தடுக்க மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது.

கேரளாவில் தென்மேற்கு பருவமழை தொடங்கி உள்ளதை அடுத்து, தென் கிழக்கு பகுதிகளிலும் பரவி உள்ளது. இந்நிலையில், தென்மேற்கு பருவமழை முன்னேற்பாடுகள் குறித்து தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில், வருவாய் மற்றும் பேரிடர் மீட்புத்துறை அதிகாரி கள், காவல்துறை அதிகாரிகள் நேற்று ஆலோசனை மேற்கொண்டனர். இதில், பருவமழையின்போது ஏற்படும் பாதிப்புகளை தடுக்க மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது.

### ஒடிசாவில் சரக்கு ரயில் ஏறியதில்

# 7 தொழிலாளர்கள் உடல் நசுங்கி பலி!

புவனேஸ்வர், ஜுன் 10-

ஒடிசா மாநிலம், பாலசோர் மாவட்டம் பகானகா பஜார் ரயில் நிலையம் அருகே, ஜுன் 2ஆம் தேதி இரவு 3 ரயில்கள் மோதி நிகழ்ந்த கோர விபத்தில் 288 பேர் உயிரிழந்தனர். உடல் நசுங்கிப் பலியான பலரது உடல்களை இப்போது வரை அடையாளம் காண முடியவில்லை. இந்தச் சம்பவம் மற்றும் அது ஏற்படுத்திய அதிர்ச்சியிலிருந்தும் மக்கள் இன்னும் மீண்டுவரவில்லை. ஆனால், கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயில் விபத்திற்கு பின்னர், நாடு முழுவதுமே பல்வேறு மாநிலங்களில் ரயில்கள் தடம்புரள்வதும், விபத்துக்கு உள்ளாவதும் அதிகரித்து வருகிறது.

குறிப்பாக, 288 பேர் பலியான துயரம் நிகழ்ந்த, அதே ஒடிசாவில் சுண்ணாம்புக்கல் ஏற்றிச்சென்ற சரக்கு ரயில், திங்களன்று பார்கார் என்ற பகுதியில் தடம் புரண்டது. இதில், 5 பெட்டிகள் சேத மடைந்தன. அதேபோல, ஒடிசாவில் ஓடும் போது, செகந்திராபாத் அகர்தலா எக்ஸ்பிரஸ் ரயிலின் ஏசி கோச்சில் இருந்து புகை வெளியான சம்பவம், செவ்வாயன்று அடுத்த பரபரப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில், புதனன்றும் இன்ஜின் இல்லாத சரக்கு ரயில் ஏறியதில், 7 தொழி லாளர்கள் ஒடிசாவில் உடல் நசுங்கிப் பலியாகியுள்ளனர். ஒருவர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

ஒடிசா மாநிலம் ஜஜ்பூர் சாலை பகுதியில் உள்ள ரயில்வே நிலையத்தில் சரக்கு ரயிலின் பெட்டிகள் பாதுகாப்பு பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தன. அதில் ரயில் இன்ஜின் இல்லை. இதற்கிடையே, ஜஜ்பூர் கியோஞ்சர் சாலை பகுதி யருகே ரயில்வே பணிக்காக ஒப்பந்த அடிப்படையில் சில தொழிலாளர்கள் வேலையில் ஈடுபட்டு இருந்தனர்.

அப்போது, மழை மற்றும் இடி காரணமாக, நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சரக்கு ரயில் பெட்டியின் அருகே சென்று ஒதுங்கியுள்ளனர். இந்நிலையில் மழையின் போது காற்று பலமாக வீசியதில் சரக்கு ரயிலின் பெட்டிகள் அவர்கள் மீது உருண்டு விழுந்தது. இந்த விபத்தில் 7 பேர் உடல் நசுங்கி உயிரிழந்துள்ளனர். ஒருவர் ஆபத்தான நிலையில் உள்ளார்.

இது தொடர்பாக அறிக்கை வெளியிட்டிருக்கும் ரயில்வே வாரியம், இன்ஜின் இல்லாத சரக்கு ரயிலின் பெட்டிகள், வேகமான காற்று வீசிய தால் உருண்டன என்று தெரிவித்துள்ளது. இந்நிலையில், சரக்கு ரயில் மோதிய விபத்தில் உயிரிழந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு தலா 5 லட்சம் நிவாரணம் வழங்கப்படும் என்று ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் அறிவித்துள்ளார்.




திருவள்ளூர் மாவட்டம் ஆவடி லயன்ஸ் கிளப் சார்பில் 53வது ஆண்டு தொடக்க விழா ஆவடி அலுவலகத்தில் ஆவடி லயன்ஸ் கிளப் தலைவர் யுவராஜ் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஆவடியில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளியில் 10 வகுப்பில் அதிக மதிபெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு ஊக்கதொகை வழங்கியதுடன் பாட ஆசிரியர்களையும் கௌரவித்தனர் மேலும் ரயில் நிலையங்களில் கூலித்தொழிலாளிகளான போர்டர்களுக்கு அரிசி மளிகை பொருட்கள் அடங்கிய நலத்திட்ட உதவிகளையும் மாற்றுத்திறனாளிகளுக்கு நகரும் நாற்காலிகளும் வழங்கினர். இதில் லயன்ஸ் கிளப் மாவட்ட ஆளுநர் ரவீந்திரன் உள்பட லயன்ஸ் கிளப் நிர்வாகிகள் பள்ளி மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.